***DEPOSITION OF WITNESS***
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
PUDUKKOTTAI.
**IDOP.No. 28/2015**

**R.W.1 திருமதி.லீமா ரோஸ் க/பெ.ஜோசப் கென்னடி நாள் – 04.11.2025**
**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :–**

21.02.2001 ல் எனக்கு திருமணமானது என்றால் சரிதான் . திருமணமானது கோட்டைக்காட்டில் நடந்தது என்றால் சரிதான் . திருமணத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்பு நிச்சயதார்த்தம் நடந்தது என்றால் சரிதான் . பொதுவாக கிறிஸ்துவ வழக்கப்படி திருமணம் மாப்பிள்ளை வீட்டிலும், நிச்சயதார்த்தம் பெண் வீட்டிலும் நடப்பது தான் வழக்கம் என்றால் சரிதான் . திருமண செலவுகள் மாப்பிள்ளை வீட்டிலும், நிச்சயதார்த்த செலவுகள் பெண் வீட்டிலும் செய்வது தான் வழக்கம் என்றால் சரிதான், ஆனால் எங்கள் திருமணத்தில் திருமணத்திற்கான பாதி செலவு எனது அம்மா கொடுத்தார் . நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல . திருமணம் நடக்கும்போது எனது மாமனார் கறம்பக்குடி ஒன்றிய செயலாளராக இருந்தார் என்றால் சரிதான் . ஒருமுறை கறம்பக்குடி யூனியன் chairman ஆக இருந்தார் என்றால் சரிதான். ஒரு முறை ஆலங்குடி MLA வேட்பாளராக இருந்தார் என்றால் சரிதான். எங்களது திருமணம் தற்போதை தமிழக முதல்வரின் தலைமையில் தான் நடந்தது என்றால் சரிதான் . திருமணம் பிரம்மாண்டமாக நடந்தது என்றால் சரிதான். நானும், மனுதாரரும் எத்தனை வருடங்களாக பிரிந்து வாழ்கிறோம் என்றால் சுமார் 10 வருடங்களுக்கு மேலாக பிரிந்து வாழ்ந்து வருகிறோம். நான் சேர்ந்து வாழவேண்டும் என்று சொல்லி கடந்த 10 ஆண்டுகளில் சட்டப்பூர்வமாக மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் மனு தாக்கல் செய்யவில்லை , பஞ்சாயத்து வைத்தோம். நான் ஆலங்குடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் மனுதாரர் வரதட்சனை கொடுமை செய்ததாக புகார் கொடுத்து அந்த வழக்கு நடந்தது என்றால் சரிதான் . அந்த வழக்கில் மனுதாரர் விடுதலையாகிவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை , எனக்கு அதுபற்றி சொல்லவில்லை . நான் கொடுத்த புகார் பொய்யானது

என்று மனுதாரர் விடுதலையாகிவிட்டார் என்றும் , அந்த விவரம் எனக்கு தெரியும் என்றும் சொன்னால் சரியல்ல . நான் மனுதாரர் மீது பொய்யான புகார் கொடுப்பதே அவருக்கு ஏற்படுத்தும் கொடுமைகள் என்றால் சரியல்ல. மனுதாரரின் தாயாருக்கு சுமார் 70, 80 வயது இருக்கும் என்றால் சரிதான். நான் எனது மாமியாரை அடித்துவிட்டதாக என் மீதும் , எனது தந்தை மீது வடகாடு காவல் நிலையத்தில் ஒரு வழக்கு நடந்தது என்றால் சரிதான் . அந்த வழக்கில் நான் தான் குற்றவாளி என்று சொல்லி ரூ.1000/– அபராதம் செலுத்தினேனா என்றால் செலுத்தினேன், ஆனால் எனது அப்பாவிற்கு உடல்நலம் சரியில்லாததால் அபராதம் செலுத்தினேன் . கறம்பக்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஜீவனாம்சம் கோரி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் . நான் மனுதாரர் மீதும் , அவரது குடும்பத்தினர் மீதும் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் மனதளவிலும் , உடலவிலும் கொடுமை செய்கிறேன் என்றால் சரியல்ல . பொதுவாக ஆசிரியர்களும், மாணவர்களும் ஒன்றாக சுற்றுலா சென்றால் ஒன்றாக Photo எடுப்பது வழக்கம் என்றால் சரிதான் . நான் மனுவில் தாக்கல் செய்துள்ள புகைப்படங்களும் அதுபோன்ற எடுத்த புகைப்படங்கள் தான் என்றால் சரியல்ல. அந்த புகைப்படங்கள் இந்த வழக்கிற்கு தேவையானது அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிருரையில் ஒரு பெண்ணின் பெயரை குறிப்பிட்டு மனுதாரருக்கும் , அந்த பெண்ணிற்கு தொடர்பு இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் பொய்யாக எதிர்வாதம் போட்டுள்ளது மனுதாரருக்கு ஏற்பட்ட கொடுமை தான் என்றால் சரியல்ல.

**இக்கட்டத்தில் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளிற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*